# வசிப்பிடம்

சுவிற்சர்லாந்தில் மூன்றில் இரண்டு பகுதியினர் வாடகை வீடுகளில் வாழ்கின்றார்கள். ஒரு வீட்டை வாடகைக்கு எடுப்பதற்கு அதற்கான சட்டஒழுங்குகளும் வாடகை ஒப்பந்தமும் சூழ்ந்துள்ளது. பெரும்பாண்மையான வாடகைக்கு எடுக்கப்படும் தனிவீடுகளுக்கோ அடுக்குமாடி குடியிருப்புக்களுக்கோ ஒழுங்குமுறைகள் உள்ளன. சுவிற்சர்லாந்தில் இதற்கு பெரும் மதிப்பளிக்கப்படுகின்றது. உதாரணமாக இராக்கால அமைதி எனப்படும் இரவு 22.00 மணி முதல் காலை 7.00 மணி வரையிலான நேரம் அதேபோல் மதிய அமைதியான 12.00 மணி முதல் 13.00 மணி வரையிலான நேரம் கடைப்பிடிக்கப்பட வேண்டியவையாகும்.

அதேபோல் ஞாயிறு மற்றும் விடுமுறைநாட்களிலும் சத்தமில்லாமல் இருத்தல் அவசியமாகும். நீங்கள் ஏதாவது கொண்டாட்டம் செய்வதாக இருந்தால் முற்கூட்டடியே உங்கள் அயலவருக்க அறியப்படுத்துங்கள்.

ஒழுங்குமுறையில் முக்கியமாக எழுத்துமூல வாடகை ஒப்பந்தம் செய்திருத்தல் அவசியமாகும். வழக்கமாக அடுத்த மாதத்துக்கான வாடகையை முதலே செலுத்துதல் வேண்டும். பெரும்பாண்மையானோர் வாடகையுடன் மேலதிக இணைப்புகளுக்கான கட்டணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும். உதாரணமாக சூடாக்கி, தண்ணீர், தொ.காட்சி இணைப்பு போன்றவற்றுக்கான. உங்களது வீட்டு வாடகையானது இணைப்புக்கட்டணத்துடன் கூடியதா அல்லது இல்லாததா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

வாடகை ஒப்பந்தமானது வாடகைக்கு இருப்பவரால் அல்லது வாடகைக்கு வழங்குபவரால் ரத்துச் செய்யபபடக்கூடியது. இது காலக்கெடுக்கு உட்பட்டது. ஒப்பந்தத்தில விரிவாக உள்ளது. வாடகைக்கு இருப்போருக்கும் வாடகைக்கு கொடுப்போருக்கும் இடையில் ஏற்படும் சிரமமான சூழ்நிலைக்கு தீர்வுகாண ஒவ்வொரு மாநிலத்திலும் அதற்கான அமைப்புகள் உள்ளன. இத்தகைய ஆலோசனைகளும் நடவடிக்கைகளும் இலவசமானகை. Bundesamts für Wohnungswesen (BWO) இணையத்தளமான www.bwo.admin.ch எனும் தளத்தில் Wohnung mieten அதாவது வாடகை வீடு எனும் தலைப்பின் கீழ் 16 மொழிகளில் தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். இதே போல் www.mieterverband.ch எனும் தளத்தில் உங்கள் பிராந்தியங்களுக்கான வாடகை வீடுகளுக்கான அமைப்புகள் பற்றிய தரவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.